**இலங்கை மின்சார சபை – 2017**

இலங்கை மின்சார சபையினதும் (''சீஈபீ'') சீஈபீ மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 49(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. லங்கா கோல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் தவிர்ந்த துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் நியமனம் செய்யப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்ட அதேநேரம் லங்கா கோல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் நிதிக்கூற்றுக்கள் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எல்கேஎஸ்/ எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சீஈபீயின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சீஈபீயின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13

ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மின்சார சபையினதும் (''சீஈபீ'') சீஈபீ மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.2.1.1 திருகோணமலை பவர் கம்பனி லிமிட்டட்டின் (ரீபிசீஎல்) கணக்காய்வாளர் அதன் நிதிக்கூற்றுக்கள் மீது பின்வரும் விடயப் பந்தியை வலியுறுத்தியிருந்தார்.

சம்பூரில் உள்ள 500 மெகா வாற்ஸ் நிலக்கரி மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் தனியுரிமையாக செயற்பட்ட கம்பனி அவ் மின்வலுப் பொறியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை கைவிட்டிருந்ததுடன் முன்னர் மூலதனமாக்கப்பட்ட செலவினங்கள் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தன. பதிலாக, சம்பூரில் நிலக்கரி மின்வலுப் பொறியை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட அதே காணியில் ரீபிசீஎல் ஆல் 50 மெகா வாற்ஸ் சூரிய மின்வலுப் பொறியை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேலும் கரவலப்பிட்டியவில் 500 மெகா வாற்ஸ் எல்என்ஜீ மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான கம்பனியின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதை இது சுட்டிக்காட்டுகின்றது.

2.2.1.2 அதன் கீழானவற்றை அடிப்படையாகக் கொண்டு 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் என்னால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**(அ) லங்கா கோல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்**

(i) ரூபா 27,478,787 கூட்டுமொத்தமான பெறவேண்டிய பெறுமதி சேர் வரி (வற்), பொருளாதார சேவைகள் கட்டணம் (ஈஎஸ்சீ) மற்றும் பிடித்துவைத்தல் வரி மற்றும் ரூபா 11,703,151 தொகையான செலுத்த வேண்டிய வரி என்பன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த அதே நேரம் ரூபா 3,371,326 மற்றும் ரூபா 12,758,801 அசாதாரண வரவு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோர்களின் கீழ் முறையே தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) மற்றும் வற் ஆக காட்டப்பட்டிருந்தன. கணக்காய்வின் போது வரிக் கணிப்பீட்டு விபரங்கள் மற்றும் வரி அறிக்கைகள் போன்ற போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகள் காணப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது இவ் மீதிகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும் கம்பனியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்ததன் பின்னர் 2018 ஒக்தோபர் 31 வரையிலும் அவ் மீதிகளை தெளிவுபடுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான வருமான வரிப் பொறுப்பு ரூபா 65,474,540 ஆக இருந்த போதிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவேடுகளில் இது ரூபா 4,046,601 ஆக காட்டப்பட்டிருந்தது. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வருமான வரிப் பொறுப்பு ரூபா 61,427,939 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட நிலக்கரிப் பெறுமதி மீதான பொருளாதார சேவைக் கட்டணத்தை செலுத்துவதற்கு கம்பனி பொறுப்பாக இருந்தது. எனினும் கம்பனியானது நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பாக ரூபா 159,790,628 நிதியேற்பாட்டை மேற்கொள்ளத் தவறியிருந்தது.

(iv) 2016 இன் 20 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 2016 நவம்பர் 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ‘‘நிலக்கரியை இறக்குமதி செய்து விநியோகித்தல்’’ மீது வற் விலக்களிக்கப்பட்டிருந்தது. ஆகையால் நிலக்கரியை இறக்குமதி செய்து விநியோகித்தல் மீதான வற்றை செலுத்துவதற்கு கம்பனி பொறுப்பாக உள்ளது. எனினும் கம்பனியானது ரூபா 5,071,823,613 மற்றும் ரூபா 4,790,535,258 தொகையான முறையே வற் உள்ளீடு மற்றும் வற் வெளியீடு என்பவற்றை கணக்கீடு செய்திருக்கவில்லை. மேலும் ரூபா 281,288,355 தொகையான அனுமதிக்கப்படாத வற் மீளாய்வாண்டின் செலவினங்களாக கருதப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக விற்பனைக் கிரயம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் கம்பனியால் இலங்கை மின்சார சபைக்கு அனுமதிக்கப்படாத வற் தொகை விலைப் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கம்பனியின் வருமானம் ரூபா 281,288,355 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 42,193,253 தொகையான அவற்றின் மீதான வரிப் பொறுப்பு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விபரமான பட்டியலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு – 19 இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியவையாக ரூபா 478,179,795 தொகை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு – 10 இன் பிரகாரம் குறுங்கால நிலக்கரி விநியோகம் தொடர்பாக லங்கா கோல் (பிறைவேட்) லிமிட்டட்டின் துணைக் கம்பனியொன்றாக உள்ள சிலோன் சிப்பிங் கோப்பரேஷன் லிமிட்டட்டிடமிருந்து பெறவேண்டிய நேரொத்த தொகை மற்றும் ஏனைய

பெறவேண்டியவைகள் ரூபா 539,192,079 ஆக இருந்தது. ஆகையால் அவ் இரண்டு தொகைகளுக்கும் இடையே ரூபா 61,012,284 இணக்கம் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எனினும் கொடுக்கல்வாங்கல் திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் கம்பனியானது சிலோன் சிப்பிங் கோப்பரேஷன் லிமிட்டட்டிடமிருந்து பெறவேண்டிய இவ் மீதியை அறவீடு செய்யத் தவறியிருந்தது. மேற்குறிப்பிட்ட மீதியின் அறவீட்டுத் தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் கம்பனியானது மேற்குறிப்பிடப்பட்ட பெறவேண்டிய மீதிக்கான ஏற்பாட்டை இனங்கண்டிருக்காதமையானது நிதிக்கூற்றுக்களின் நியாயமான சமர்ப்பிப்பிற்கு தாக்கம் செலுத்துகின்றது.

**(ஆ) ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்**

(i) பறக்கும் சாம்பல் மற்றும் கீழ் சகதியை (fly ash and bottom sludge) பயன்படுத்தி சீமெந்து அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக இலங்கையில் கூட்டுமுயற்சி ஒன்றை ஸ்தாபிப்பதற்காக 2012 யூலை 27 இல் அம்ட்ராட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டுடன் இணைந்த உடன்படிக்கையொன்றை கம்பனி கைச்சாத்திட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியால் ரூபா 7,364,447 முதலீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2014 மார்ச் 27 இல் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு சபை தீர்மானித்திருந்தது. இது தொடர்பில் ஏற்பட்ட கிரயங்களின் அறவீட்டுத் தன்மை தொடர்பாக போதியளவும் பொருத்தமானதுமான சான்றை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. தொடர்ந்து அவ் முதலீடு தொடர்பாக ஏதாவது நட்டக்கழிவு இனங்காணப்பட வேண்டியுள்ளதா என நான் தீர்மானிக்க முடியாதுள்ளேன்.

(ii) சுயாதீனமான உறுதிப்படுத்தல்கள் அல்லது ஏனைய கொடுக்கல்வாங்கல் ரீதியான உதவிகள்/ முறையான பெறுமதி கணிப்பீடுகள்/ பௌதீக ரீதியான இருப்பு மெய்மையாய்வு தாள்கள் காணப்படாத போது அறிக்கைத் திகதியிலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் பிரதிபலித்திருந்த ரூபா 7,505,626 தொகையான மானி மேவுகைப் பெட்டி (meter enclosure) இருப்பு மீதியின் உள்ளதன்மை மற்றும் பெறுமதிக் கணிப்பீடு தொடர்பாக என்னால் திருப்தியடைய முடியாதிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய நலன் கடப்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ரூபா 642,434 முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக காணப்பட்ட ரூபா 438,231 தொகையான பணிக்கொடை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(iv) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 111-124 பந்திகளின் பிரகாரம் (அ) நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட அளவீட்டு அடிப்படை அல்லது அடிப்படைகள் மற்றும் (ஆ) நிதிக்கூற்றுக்களை விளங்கிக்கொள்வதற்கு உரியதாக பயன்படுத்தப்பட்ட ஏனைய கணக்கீட்டுக் கொள்கைகள் உள்ளடங்கலாக தொகுதி அதனது முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டும். நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட அத்தகைய கணக்கீட்டுக் கொள்கை எதுவும் காணப்படவில்லை.

(v) இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் (அ) முன்னைய காலப்பகுதித் தவறின் தன்மை; (ஆ) முன்னைய காலப்பகுதி ஒவ்வொன்றிற்காகவும் நடைமுறையில் சாத்தியமாக சமர்ப்பிக்கப்பட்டமை;

(இ) மிகவும் முன்னைய காலப்பகுதியின் ஆரம்பத்திலுள்ள திருத்தம் செய்யும் தொகை சமர்ப்பிக்கப்பட்டமை உள்ளடங்கலாக முன்னைய காலப்பகுதி தவறுகளை தொகுதி வெளிப்படுத்த வேண்டும். நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட அத்தகைய வெளிப்படுத்தல் எதுவும் காணப்படவில்லை.

(vi) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 12-14 மற்றும் 15-20 பந்திகளின் பிரகாரம் தொகுதியானது இலாப அல்லது நட்டக் கூற்றிற்கான உரிய கட்டணம்/ தள்ளுபடியுடன் சேர்த்து ஒவ்வொரு நிதிக் காலப்பகுதிக்கான நடைமுறை வரிப் பொறுப்பு/ சொத்து மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு/ சொத்தை இனங்காணுதல் வேண்டும். எனினும் தொகுதியானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் மேற்குறிப்பிடப்பட்டவைக்காக கணக்கீடு செய்திருக்கவில்லை.

(vii) இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் 13, 14, 18, 19, 25 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் விலை அறவிடப்படுகின்றதா என்பது தவிர அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரிற்கிடையே வளங்கள், சேவைகள் அல்லது கடப்பாடுகள் மாற்றப்படுகின்ற தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களை தொகுதி வெளிப்படுத்துதல் வேண்டும். எனினும் இந் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட அத்தகைய வெளிப்படுத்தல் குறிப்பு எதுவும் காணப்படவில்லை.

(viii) இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம் பின்வரும் (அ) குறுங்கால ஊழியர் நலன்கள்; (ஆ) ஊழியத்தின் பின்னரான நலன்கள்; (இ) ஏனைய நீண்டகால நலன்கள்; (ஈ) முடிவுறுத்தல் நலன்கள்; மற்றும் (உ) பங்கீட்டு அடிப்படையிலான கொடுப்பனவு ஆகிய பின்வரும் வகைப்படுத்தல்களை மொத்தமாகவும் அவற்றில் ஒவ்வொன்றிற்காகவும் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் நிறுவனமொன்றின் நடவடிக்கைகளை திட்டமிட்டு வழிநடாத்தி கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் மற்றும் பொறுப்பைக் கொண்டிருக்கும் மக்களாக உள்ள அவ் பிரதான முகாமைத்துவ ஆளணியினரிற்கான இழப்பீட்டை தொகுதி வெளிப்படுத்துதல் வேண்டும். எனினும் இந் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட அத்தகைய வெளிப்படுத்தல் குறிப்பு எதுவும் காணாப்படவில்லை.

### 2.2.2 சீஈபீயின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

சீஈபீயானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட ஊழியர், மூலப்பொருள் மற்றும் மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 5,918,929,637 கூட்டுத்தொகையான சாதகமான மூலப்பொருள் விலை முரண் மற்றும் ஊழியர் மற்றும் மேந்தலை விகித முரண்களும் ரூபா 1,053,069,877 தொகையான சாதகமற்ற களஞ்சிய விலை முரணும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இதன் விளைவாக, சீஈபீயின் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பன மூலதன வேலைகள் தொடர்பில் உயர் நிதிசார் ஈடுபடுத்தல் காரணமாக குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ் மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக அது தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது.

**(ஆ) எல்கேஏஎஸ் 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள மாற்றங்கள் மற்றும் தவறுகள்**

சீஈபீயின் பணிப்பாளர் சபையால் நிறுவன கொள்கை தீர்மானமொன்று எடுக்கப்படாமல் மேலதிக பொது முகாமையாளரால் (உற்பத்தி) வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் ரூபா 31,604,054 மற்றும் ரூபா 1,618,736,079 பெறுமதியான துணைப் பாகங்கள் முறையே செயற்பாட்டு செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. ஆகையால், அத்தகைய வகைப்படுத்தலிற்காக பிரயோகிக்கப்பட்ட அடிப்படையின் நியாயத்தன்மையினை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும், வகைப்படுத்தலிற்காக பிரயோகிக்கப்பட்ட அடிப்படையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சீஈபீயால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. சந்தர்ப்பமொன்றாக, ரூபா 23,932,093,328 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நான்கு மின்வலு நிலையங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் மின்வலு உற்பத்திக்காக தற்போதும் பயன்படுத்தப்படுகின்றன.

**(இ) எல்கேஏஎஸ் 27 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

சபையின் ஊழியர் சேமலாப நிதியத்தால் (ஈபிஎவ்) நிதிக் கருவிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 2,312,756,993 இன் அறவீட்டுத்தன்மை அந் நிதிக் கருவிகள் காணப்படாததன் காரணமாக ஐயத்திற்கிடமாக உள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்தின் பாதுகாவலராக சீஈபீ உள்ளதால் நிகழத்தக்கவற்றிற்கான (ஏதாவது இருந்தால்) இறுதிப் பொறுப்பு சபைக்குரியதாக காணப்படுகின்றது. எனினும் இவ் நிகழத்தக்கவை தொடர்பாக சபையின் நிதிக்கூற்றுக்களில் எந்தவொரு ஏற்பாடோ அல்லது வெளிப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சீஈபீயின் ஓய்வூதிய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 403,717,966 தொகையான முதலீடு மற்றும் அதன் மீதான ரூபா 16,045,328 தொகையான வட்டியின் அறவீட்டுத்தன்மையானது அந் நிதிக்கருவிகள் காணப்படாததன் காரணமாக சந்தேகத்திற்கிடமாக உள்ளது. எனினும் இது தொடர்பில் சீராக்கங்களோ அல்லது ஏற்பாடுகளோ நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் (பிபிஈ) மீதி மற்றும் மீளாய்வாண்டின் போது பிபிஈ இன் நட்டம் என்பன சீஈபீயின் சொத்துக்களாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சிற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக முறையே ரூபா 14,605,980 மற்றும் ரூபா 2,086,567 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) ரூபா 1,473,735,676 வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 16,654,669 செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் காணப்பட்டது.

(ஈ) தரகு, தீர்வைக் கட்டணங்கள் போன்ற வெளிநாட்டுக் கொள்வனவுகள் மீதான ரூபா 746,546,369 கூட்டுத்தொகையான செலவினம் உரிய செலவினம் அல்லது சொத்துக் கணக்குகளிற்கு உட்சேர்க்கப்படாததால் 2013 ஆம் ஆண்டிலிருந்து லக்விஜயா மின்வலு நிலையத்தின் வழியிலுள்ள சரக்குக் கணக்கில் காணப்பட்டது.

(உ) அமைச்சரவையின் 10/2434/423/034 ஆம் தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலுப் பொறி நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159,184,187,965 கடன் தொகைக்கான கடன் மற்றும் அதன் மீதான வட்டியை பொதுத் திறைசேரிக்கு சீஈபீ மீளச் செலுத்த வேண்டும். எனினும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அக் கடனிற்கான வட்டியாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,398,152,185 தொகையையும் 2016 திசெம்பர் 31 வரை ரூபா 18,567,893,780 தொகையையும் கடனளிக்கும் வங்கிக்கு செலுத்தியிருந்த போதிலும் சீஈபீ அதன் கணக்குகளில் மேற்படி கொடுப்பனவுகளிற்காக செலுத்தியோ அல்லது ஏற்பாடுகளை மேற்கொண்டோ இருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 3,398,152,185 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா 21,966,045,965 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) சீஈபீயால் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் சார்பில் ஏற்பட்ட ரூபா 35,220,599 தொகையான செலவினங்கள் பெறவேண்டியவையாக கருதப்படாமல் சீஈபீயின் செலவினங்களாக கருதப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டிற்கான நட்டம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) அமைச்சரவையால் எடுக்கப்பட்ட 2015 மார்ச் 19 ஆம் திகதிய 15/0228/613/012 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் பெறப்பட்ட ரூபா 820,969,500 இற்குச் சமமான ஐ.அ.டொலர் 5,412,000 கடன் மற்றும் அதன் மீதான ரூபா 5,602,295 வட்டி என்பன நிதிக்கூற்றுக்களிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் மற்றும் நட்டம் என்பன முறையே ரூபா 820,969,500 மற்றும் ரூபா 5,602,295 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக சீஈபீயால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டைப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன ரூபா 66,987,761 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

**2.2.2.3 இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீயின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட ரூபா 49,468,844,000 தொகையான மீதிக்கும் அத் திகதியிலுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட ரூபா 50,255,066,432 தொகையான நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 786,222,430 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் சீசீபீயின் தலைவர் பின்வருமாறு கூறியிருந்தார்.

***"2013 செப்தெம்பர் 30 இல் திறைசேரிச் செயலாளரால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், 2013 ஏப்ரல் 20 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தாமதமான பற்றுச்சீட்டுப் பெறுமதியின் (கடன் காலத்திற்கு அப்பால்) மீதான வட்டியைச் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 753,610,829 தாமத வட்டிக் கொடுப்பனவு சீசீபீயால் 2013 ஏப்ரல் 20 இற்கு முன்னரான எரிபொருள் கொள்வனவுடன் தொடர்புபட்டிருந்தது. ஆகையால், இதற்கு சீசீபீ பொறுப்பில்லாததால் இந்த வேறுபாடு இணக்கம் செய்யப்பட வேண்டியதில்லை."***

எனினும், இது கணக்காய்வு அறிக்கைகளில் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் அச் சிக்கல் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 1, 2, 3 மற்றும் 4 இன் விலைப்பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 331,154,817 கூட்டுமொத்தமான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 18,203,663,608 வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 3,826,334,673 மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 1,929,746,044 தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடாதிருந்தது. மேலும் ரூபா 423,764,624 தொகை 2012 இலிருந்து இனங்காணப்படாதிருந்தது.

(ஆ) லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டிடமிருந்து (எல்ஈசீஓ) கிடைக்க வேண்டிய ரூபா 32,765,469 தொகை எந்தவொரு அறவீட்டு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(இ) ரூபா 2,505,397,073 கூட்டுத்தொகையான பின்வரும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் எனது முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன.

| **கடன்பட்டோரின் பெயர்** | **தொகை** | **விபரம்** |
|---|---|---|
| | **ரூபா** | |
| பொதுத் திறைசேரி | 225,000,000 | வீதி வெளிச்சமிடல் மற்றும் பராமரிப்புக் கிரயத்தை அறவீடு செய்தல். |

| | | |
|---|---|---|
| வூட் குறூப் காஸ் ரேர்பின் லிமிட்டட் | 8,264,352 | கொழும்பு கோட்டையிலிருந்து பன்னிப்பிட்டிய பகுதிக்கு வூட் குறூப் காஸ் ரேர்பினை போக்குவரத்துச் செய்வதற்கு அவர்களின் இழுவைப் பெட்டியை (trailer) பயன்படுத்தியமைக்காக Fiagioli Italy இற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள். |
| மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 6,142,277 | கெரவலப்பிட்டிய இணைந்த மின்வலுப் பொறியின் திறப்பு விழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள். |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை | 897,025,999 | நுண் நீர்மின் அபிவிருத்தியாளர்களுக்குச் சீஈபீயால் செலுத்தப்பட்ட கட்டணச் சீராக்கங்கள். |
| ஏஈஎஸ் கெலனிதிஸ்ஸ (பிறைவேட்) லிமிட்டட் | 1,368,964,445 | விலை வேறுபாடுகளின் கொடுப்பனவு மீது அறவிடப்பட வேண்டிய தொகை. |
| **மொத்தம்** | **2,505,397,073** | |

(ஈ) 2016 ஆம் ஆண்டில் பொதுத்திறைசேரியால் விதிக்கப்பட்ட ரூபா 5 பில்லியன் விசேட விதிப்பனவிற்கெதிராக வழங்கப்பட வேண்டுமென இணங்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோர்களாக காட்டப்பட்டிருந்த திறைசேரி பிணை முறிகள் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சபையால் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம்

(i) **47(1)(ஆ) பிரிவு** – சீஈபீயினால் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியுடன் ஆழ்நிதியமொன்றை சீஈபீயானது ஸ்தாபித்து பேணலாம். இந் நிதியத்திலுள்ள மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அது 2000 ஆம் ஆண்டிலிருந்து நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஒதுக்கக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 17,447 மில்லியனாக காணப்பட்டது.

(ii) **47(2)(அ) பிரிவு** – சீஈபீயின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வை மேவுகை செய்வதற்காக சீஈபீ பொதுத் திறைசேரியுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஸ்தாபித்து பேணலாம். எனினும், அத் தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடாந்தம் ரூபா 1 மில்லியன் தொகையினை மாற்றம் செய்வதன் மூலம் அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை சீஈபீயானது ஸ்தாபித்திருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித நகர்வும் இடம்பெற்றிருக்கவில்லை. அத்திகதியில் திரண்டிருந்த ரூபா 23 மில்லியன் தொகை எவ்வித மீளாய்வும் இன்றி தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(iii) **47(2)(ஆ) பிரிவு** – சீஈபீயின் நிதி ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதன் மூலம் வருமானத்திலிருந்து அதன் மூலதன வேலைகளிற்கு நிதியளிக்கும் நோக்கத்திற்காகவும் சீஈபீ காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அவ்வாறான ஏனைய நோக்கங்களிற்காகவும் சீஈபீ பொதுத் திறைசேரியுடன் பொது ஒதுக்கமொன்றை ஸ்தாபித்து பேணலாம். எவ்வாறாயினும், அத் தேவைப்பாட்டிற்கு முரணாக சீஈபீ அதனது நிதிக்கூற்றுக்களில் ஏனைய மூலதன ஒதுக்கமொன்றை ஸ்தாபித்திருந்ததுடன் இது 2000 ஆம் ஆண்டு முதல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவ் ஒதுக்கக் கணக்கு மீதி ரூபா 165.45 மில்லியன் தொகையாக இருந்தது.

**(iv) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 46 ஆம் பிரிவு மற்றும் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள்** - 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறான மொத்தம் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிதியத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,246 மில்லியன் தொகையை மாத்திரம் சீஈபீ முதலீடு செய்திருந்தது.

(ஆ) சீஈபீயானது 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு நுகர்வோர் வைப்புக்களிற்கான வட்டியை சீஈபீ செலுத்தியிருக்காததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,163 மில்லியனாக இருந்ததுடன் செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 1,963 மில்லியனாக இருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காப்புறுதி ஒதுக்க நிதியத்துடன் தொடர்புடைய ரூபா 7,088 மில்லியன் தொகையொன்று சீஈபீயின் சுய காப்புறுதிக் கொள்கையின் பிரகாரம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தகைய நியதிச்சட்ட தேவைப்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்காக சீஈபீயில் முறையான நிதி முகாமைத்துவம் செயற்பாட்டில் இருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சீஈபீயினதும் தொகுதியினதும் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் முறையே ரூபா 13,191 மில்லியன் மற்றும் ரூபா 10,391 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 45,729 மில்லியன் மற்றும் ரூபா 41,156 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்ததனால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 32,538 மில்லியன் மற்றும் ரூபா 30,765 மில்லியன் வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது. விலை அதிகரிப்பு காரணமாக நிலக்கரியின் கிரயம் 86 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் நிலக்கரி இறக்குமதி மீது பெறுமதி சேர் வரி (வற்) விதிக்கப்பட்டமை என்பன நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இவ் வீழ்ச்சிக்குப் பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

எனினும் ரூபா 63,741 மில்லியன் கூட்டுத்தொகையான ஆளணி வேதனங்கள், வரிச் செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வை கணக்கிற்கு எடுத்ததன் பின்னர் மீளாய்வாண்டிற்கான சீஈபீயின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 26,210 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 21,243 மில்லியனால் அல்லது 44 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

### 3.2.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகுதியின் தொழிற்படு மூலதன நிலைமை ரூபா 29,813 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியாக இருந்த அதே நேரம் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு இது ரூபா 15,056 மில்லியன் நேர்மறைப் பெறுமதியாக இருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதன நிலைமை 298 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 37,004 மில்லியனால் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தது. மேலும் சீஈபீ மீளாய்வாண்டில் ரூபா 846 மில்லியன் மேலதிகப்பற்று வட்டியை செலுத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 3,560 சதவீத அதிகரிப்பொன்றாக இருந்தது.

### 3.2.2 உரிமை மூலதனத்திற்கான கடன்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகுதியின் உரிமை மூலதன மீதியானது தொகுதியின் தொடர்ச்சியான தேசிய நட்டம் காரணமாக நேரொத்த 4 சதவீத வீழச்சியுடன் ஒப்பிடும் போது 9 சதவீதத்தால் வீழச்சியடைந்திருந்தது. இதன் விளைவாக தொகுதியின் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் முன்னைய ஆண்டில் 51 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 60 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. மேலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொகுதியில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தில் 37 சதவீதம் அல்லது ரூபா 249 பில்லியன் கடன்களினூடாக நிதியிடப்பட்டிருந்தது.

### 3.2.3 இலாபத்தன்மை

2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 18.08 ஆன அலகு ஒன்றிற்கான சராசரிக் கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 20.34 ஆக இருந்ததுடன் அலகொன்று ரூபா 16.26 சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டது. (முன்னைய ஆண்டுச் சராசரி விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 16.18 ஆக இருந்தது). அதற்கிணங்க, மீளாய்வாண்டின் அலகொன்றுக்கான மொத்த நட்டம் ரூபா 4.08 ஆக இருந்ததுடன் அலகொன்றுக்கான ரூபா 1.90 ஆன முன்னைய ஆண்டுச் சராசரி மொத்த நட்டத்துடன் ஒப்பிடும் போது இது 114 சதவீத அதிகரிப்பாக இருந்தது. பின்வரும் அட்டவணையானது கட்டண வகைப்படுத்தலையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட மின்சாரத்தின் அலகொன்றிற்கான (கேடபிள்யூஎச்) பங்களிப்பையும் காட்டுகின்றது.

| **வகை** | **அலகொன்றிற்கான பங்களிப்பு (கேடபிள்யூஎச்)** | |
|---|---|---|
| | **2017** | **2016** |
| | **ரூபா** | **ரூபா** |
| உள்நாடு | (6.86) | (4.66) |
| மதத்தலங்கள் | (13.13) | (10.93) |
| பொது நோக்கம் | 3.40 | 5.82 |
| ஹோட்டல் | (2.61) | (0.34) |
| கைத்தொழில் | (5.57) | (3.45) |
| அரசாங்கம் | (2.08) | 0.26 |
| எல்ஈசீஓ இற்கான மொத்த வழங்கல்கள் | (4.55) | (2.31) |
| வீதி விளக்குகள் | (20.34) | (18.08) |
| **அலகொன்றிற்கான பங்களிப்பு** | **(4.08)** | **(1.90)** |

இதற்கமைய, பொது நோக்கத்தின் கட்டண வகைப்படுத்தல் மீளாய்வாண்டின் மொத்தப் பங்களிப்பிற்கு நேர்மறைப் பங்களிப்பாளராக மாத்திரம் இருந்தது. முன்னைய ஆண்டில் அரசாங்க வகைப்படுத்தலின் நேர்மறைப் பங்களிப்பு இந்த ஆண்டில் எதிர்மறையாக வந்திருந்தது. கைத்தொழில் மற்றும் உள்நாட்டு வகைப்படுத்தல் மீதான கட்டணம் மீளாய்வாண்டிற்கான மொத்தப் பங்களிப்பிற்கு ஆகக்கூடிய எதிர்மறைப் பங்களிப்பாளராக இருந்ததுடன் மதத்தலங்கள் ஹோட்டல், அரசாங்கம், எல்ஈசீஓ இற்கான விற்பனைகள் மற்றும் வீதி விளக்குகள் மீதான கட்டணமும் அதற்குரிய சாதகமற்ற பங்களிப்புக்களை காட்டியிருந்தன.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 மின்வலு உற்பத்தி மற்றும் உற்பத்திக் கிரயம் (வழங்கல் மற்றும் பரிமாற்றல் கிரயம் தவிர)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாட்டிற்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை விநியோகிப்பது சீஈபீயின் பிரதான நோக்கமாக உள்ள போதிலும் மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள சாதகமற்ற நிபந்தனைகள், அனல் மின்வலு உற்பத்திக்காக ஏற்பட்ட உயர் கிரயம் மற்றும் காற்று மற்றும் ஏனைய வழக்கத்திற்கு மாறான புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களிலிருந்தான குறைந்த பங்களிப்புக் காரணமாக சீஈபீயால் இந் நோக்கத்தை அடைய முடியாதிருந்தது.

மேலும் சீஈபீயின் நீண்டகால உற்பத்தித் திட்டம் மற்றும் பரிமாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக சீஈபீ அவசர மின்வலுக் கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தமையானது (ரூபா 26,628 மில்லியன் பெறுமதியான 1,240 ஜீடபிள்யூஎச்) சீஈபீயின் ஆகக் குறைந்த கிரய நோக்கத்தை மோசமாக பாதித்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டிற்கான மின்வலு உற்பத்தி நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| **மூலம்** | **2017** | **2016** | **மொத்த உற்பத்திக்கான பங்களிப்பின் சதவீதம்** | |
|---|---|---|---|---|
| | **ஜிடபிள்யூஎச்** | **ஜிடபிள்யூஎச்** | **2017** | **2016** |
| நீர்மின் | 4,004 | 4,220 | 27 | 30 |
| அனல்மின் | 5,045 | 4,461 | 34 | 31 |
| நிலக்கரி | 5,103 | 5,047 | 35 | 36 |
| காற்று | 367 | 345 | 3 | 2 |
| ஏனைய வழக்கத்திற்கு மாறானவை | | | 1 | 1 |
| புதுப்பிக்கத்தக்க சக்தி | 152 | 76 | | |
| **மொத்தம்** | **14,671** | **14,149** | **100** | **100** |

**(ஆ) நேர்க் கிரயம்**

---------------------

மீளாய்வாண்டின் போது நிலக்கரி மின்வலு உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்படாத போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டில் நிலக்கரி மின்வலு உற்பத்தியின் கிரயம் ரூபா 17,301 மில்லியனால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டிற்கான மின்வலுக் கொள்வனவுக் கிரயம் மற்றும் எரிபொருள் கிரயம் என்பன முறையே ரூபா 7,502 மில்லியன் மற்றும் ரூபா 7,768 மில்லியன் அல்லது 9 சதவீதம் மற்றும் 15 சதவீததத்தால் அதிகரித்திருந்த அதே நேரம் அனல் மின்வலு உற்பத்தி மீளாய்வாண்டின் போது 13 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்திருந்தது. மின்வலு உற்பத்தியில் உள்ளடக்கப்பட்ட நேர்க் கிரய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விடயம்** | **2017** | | **2016** | |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** |
| எரிபொருள் | 57,842 | 27 | 50,074 | 28 |
| மின்வலு கொள்வனவு | 89,254 | 42 | 81,752 | 46 |
| நிலக்கரி | 37,505 | 18 | 20,204 | 11 |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 11,727 | 6 | 12,083 | 7 |
| பெறுமானத்தேய்வு | 14,476 | 7 | 14,797 | 8 |
| **மொத்த நேர்க் கிரயம்** | **210,804** | **100** | **178,910** | **100** |

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 35 ஆண்டுகள் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்தையுடைய 2005 ஆம் ஆண்டில் ரூபா 18,254,550 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு மின்மாற்றிகள் பெறுகை செயன்முறையில் இனங்காணப்பட்ட குறைந்த மின்னழுத்த நிலைமைகளை எதிர்கொள்ள முடியாததன் காரணமாக முறையே 5 ஆண்டுகள் மற்றும் 7 ஆண்டுகளினுள் செயற்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. பின்னர் சபையின் அங்கீகாரத்துடன் அவற்றை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும் இக் கொடுக்கல்வாங்கலிற்குப் பொறுப்பான நபர்களை புலனாய்வு செய்து இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 செப்தெம்பர் 11 இல் ரூபா 7,221,707 கியத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மூவாயிரம் மின்காப்புப் பொருட்கள் (Pin 33KV) தாழ்ந்த தர சிக்கல் காரணமாக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2018 செப்தெம்பர் 30 வரையிலும் இவை பதிலீடு செய்யப்படாமல் விளைவற்றிருந்தன. இது தொடர்பில் பெறப்பட்ட செயலாற்றல் முறியின் செல்லுபடியாகும் காலப்பகுதி 2016 பெப்ரவரி 26 இல் காலங்கடந்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 ஏப்ரலில் உதுறுவசந்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 52,550,929 இருப்பு பற்றாக்குறை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் விசேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2018 செப்தெம்பர் 30 வரையிலும் இப் பற்றாக்குறைக்குப் பொறுப்பான அவ் உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் 2015 இல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் நீதிமன்ற வழக்கொன்று (வழக்கு இல. பீ/1164/15) தொடரப்பட்டிருந்தது. மேலும் நீதிமன்ற வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3,674,861 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந் நபரிற்கெதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதே ஊழியர் இன்னொரு அலுவலகத்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(உ) ரூபா 3,789,893 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் மேற்படி பொருண்மையான தொகை சீராக்கல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) இடர், போக்குவரத்து, விழா முற்பணம் மற்றும் விசேட முற்பணம் போன்ற ரூபா 4,860,885 பெறுமதியான பதவியணியினர் கடன்கள் எந்தவொரு அறவீட்டு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் நிலுவையாக காணப்பட்டது.

### 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

ரூபா 17,936,845,512 மொத்த நுகரத்தக்க இருப்பில் 11 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,051,605,881 தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவாக அசையும், அசைவற்ற மற்றும் சேதமடைந்த இருப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. அசைவற்ற மற்றும் மெதுவாக அசையும் இவ் இருப்புக்களை பேணுதல் சேதங்கள், வைத்திருக்கும் கிரயம் மற்றும் மோசடிகள் போன்றன அதிகரிப்பதற்கு காரணமாக அமையலாம்.

### 4.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உழைக்கும் போதே செலுத்தும் (பிஏவைஈ) வரிப்பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கு முரணாக 2010 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து ரூபா 3,294,348,130 உழைக்கும் போதே செலுத்தும் வரியை கழிக்காமல் சீஈபீ அதன் சொந்த நிதியிலிருந்து அத்தொகையை செலுத்தியிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 676,508,227 ஆக இருந்தது.

மேலும் 2001 மே 20 ஆம் திகதிய 1706/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் குறித்துரைக்கப்பட்ட காசற்ற நலன்களின் பெறுமதி ஒவ்வொரு ஊழியரினதும் உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எனினும் சீஈபீயானது தனிப் பாவனைக்கான விடுதிகள், குடியிருப்புக்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற ஏற்பாடுகளிற்கான காசற்ற நலன்களை இந் நோக்கத்திற்காக கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக சபையின் அங்கீகாரம் மீது சீஈபீயின் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,930 மில்லியன் மற்றும் ரூபா 1,222 மில்லியன் கூட்டுமொத்தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சீஈபீ 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங்கியிருந்தது. மேலும், சீஈபீ பல திரவ பிரச்சனைகளை எதிர்கொள்ளுகின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈபீயானது பல வருடங்களாக மின்சாரத்தை எல்ஈசீஓ இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்கிடையே சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக இவ் இரண்டு தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் காணப்படவில்லை.

(ஆ) உப கடன் உடன்படிக்கைகளில் உள்ள நிபந்தனைகளின் பிரகாரம் பொதுத் திறைசேரிக்கு ரூபா 2,171,027,353 வட்டியை சீஈபீ செலுத்தியிருக்காததுடன் மேற்படி வட்டிக் கொடுப்பனவு தாமதம் மீது வருடாந்தம் 1 சதவீதம் முதல் 2 சதவீதம் வரையிலான வீச்சில் மேலதிக வட்டி செலுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும் ரூபா 13,090,107,000 மொத்தப் பெறுமதிக்கான நான்கு உப கடன்கள் தொடர்பான உடன்படிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சீஈபீயின் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2017 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 41,829,697 தொகை கழிக்கப்பட்டிருந்தது.

## 4.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈபீயின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவியாக பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) உள்ள போதிலும் அப்பதவிக்கு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தில் (எல்ஓஆர்) குறித்துரைக்கப்பட்டிருக்காததுடன் ஏனைய சேவைகள் விசேடமாக மின் பொறியியலாளர்களிற்கு இப்பதவிகளை பெற்றுக்கொள்வது இயலுமானதாக இருந்தது.

(இ) தற்போதுள்ள எஸ்ஓஆர் இன் பிரகாரம், மொத்த மனித வள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) பதவியணியில் 50 சதவீதமானவை வெளியிலிருந்து நிரப்பப்படுவதுடன் அந்த சதவீதத்தை ஆண்டிற்கு ஆண்டு படிப்படியாக 85 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சீஈபீயின் வரலாற்றில் இரண்டு பொறியியலாளர்கள் பிரிவுத் தலைவர்களின் தொழிற்பாடுகளை நீண்டகாலமாக மேவுகை செய்திருந்ததால் பதவியுயர்வுத் திட்டத்தில் அவ்வாறு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதிவியுயர்த்தல் பாதையொன்று அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மனித வள முகாமையாளர் (எச்ஆர்எம்) மற்றும் மனித வள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான அனுபவமானது 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவனமொன்றில் மனித வளத் துறையில் 06 ஆண்டுகளாக உள்ளமை சீஈபீயில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடும் போது அது போதுமானதாக காணப்படவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்

ஐக்கிய நாடுகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட ''நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சிநிரல் 2030'' இலுள்ள 17 இலக்குகளில் 7 ஆவது இலக்காக ''மலிவான நம்பிக்கைத்தன்மையானதும் நிலைபேறானதும் நவீனமானதுமான சக்தி சேவைகளிற்கான நுழைவினை உறுதிப்படுத்துதல்'' காணப்படுகின்றதுடன் இவ் இலக்கு சீஈபீயின் நோக்கெல்லையினுள் காணப்படுகின்றது. ஆகையால் இலங்கையில் 2030 அளவில் இவ் இலக்குகளை அடைந்துகொள்வதை உறுதிப்படுத்துவதற்கு சீஈபீ பொறுப்பாக உள்ளது. எனினும் சீஈபீ இலக்குகள் மற்றும் அவ் இலக்கை அடைந்துகொள்வதற்கான இலக்குக் கட்டங்களை இதுவரை இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 சமூக பொறுப்புகள்

மாகாண சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையால் லக்விஜயா மின்வலு நிலையத்திற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (ஈபிஎல்) 2017 யூலையிலிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட முப்பத்தியிரண்டு கணக்காய்வுப் பந்திகள் மீளாய்வாண்டிலும் தீர்வு காணப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | விநியோகப் பிரிவுகளிலுள்ள மூலதன வேலைகளினை பூர்த்தி செய்வதிலுள்ள நீண்டகால தாமதம் |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள சீபிசீயின் காணிகளின் அளவை, பெறுமதி கணிப்பீடு மற்றும் பாதுகாப்பை துரிதப்படுத்தல் |
| | | (iii) | வாகனங்களிற்கான நாளதுவரையாக்கப்பட்ட தரவுத் தளத்தின் பராமரிப்பு |
| (ஆ) | பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள் | | கடன்பட்டோர் மற்றும் ஏனைய வருமதிகளை உரிய காலத்தில் அறவிடுதல். |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | | நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான வகிபங்கு மற்றும் பரப்பின் பிரகாரம் மனித வளங்களின் முகாமைத்துவம் |
| (ஈ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) | இருப்புப் பதிவேடுகளை முறையாக பேணுதல் |
| | | (ii) | இருப்பு பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளை தவிர்ப்பதற்கு நிலக்கரி இருப்பு கையாளல் மீது பொருத்தமான கட்டுப்பாடுகளை ஸ்தாபித்துப் பேணுதல். |
| (உ) | செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு | (i) | செயற்திட்டத்தை உரிய காலவரையறைக்குள் பூர்த்தி செய்தல். |
| | | (ii) | பொறியியல் மதிப்பீட்டை யதார்த்தமாக தயாரித்தல் |
| (ஊ) | கணக்கீட்டு முறைமை | | கணக்கீட்டு முறைமையில் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காரணமாக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் சீஈபீயின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ச்சியாக மீண்டும் முன்வைக்கப்படுகின்றன. |